புதுச்சேரி அரசு

# சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை

## நிலம் கையகப்படுத்தல்

## புதுச்சேரி மாவட்டம் வில்லியனூர் தாலுக்காவின் -52 அரியூர் வருவாய் கிராமத்தின், "நிலமற்ற ஏழை SC/ST/OEBC மக்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்குவதற்கு நிலம் கையகப்படுத்துதல்"

# 2024


**தயாரித்து சமர்ப்பித்தவர்கள்**

**டாக்டர். சுந்தர் ஆறுமுகம்- குழுத்தலைவர்**
உதவி பேராசிரியர்- சமூக பணித்துறை, டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி
அரசு. முதுகலை படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
காரைக்கால் - 609605
&
**செல்வி. கே. வித்யா, சமூக பணியாளர், உறுப்பினர்**
ஷைன் குழந்தைகள் இல்லம், புதுச்சேரி

# சான்றிதழ்

**புதுச்சேரி மாவட்டம் வில்லியனூர் தாலுகாவில் உள்ள 52 அரியூர் வருவாய் கிராமத்தின்** நிலமற்ற **ஏழை SC/ST/ OEBC மக்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்குவதற்கு நிலம் கையகப்படுத்துதல்** என்னும் தலைப்பில் சமூக தாக்க கணிப்பு மதிப்பீட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அசல் என்று எங்கள் அறிவுக்கு எட்டிய வரை சான்றளிக்கின்றோம். இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் இரகசியமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**இடம்: காரைக்கால்**

**தேதி: 29 /08/2024**

**டாக்டர். சுந்தர் ஆறுமுகம்- குழுத்தலைவர்**
**உதவி பேராசிரியர் - சமூகப்பணித்துறை**

**டாக்டர்.கலைஞர் மு. கருணாநிதி அரசு. முதுகலை படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,**

**காரைக்கால் – 609 605**

**செல்வி. கே. வித்யா - உறுப்பினர்**
**சமூக பணியாளர்,**
**ஷைன் குழந்தைகள் இல்லம், புதுச்சேரி**

# <u>உறுதிமொழி</u>

நிலம் கையகப்படுத்துதல், நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம், 2016 புதுச்சேரியின் பிரிவு 9 (7)ன் படி, நாங்கள் எந்த வகையிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர்/குடியிருப்பாளர்கள்/நிலங்களுடன் தொடர்புடையவர்கள் அல்ல என்று சமூகத் தாக்க மதிப்பாய்வின் உறுப்பினர்களாகிய நாங்கள் தெரிவிக்கின்றோம். **புதுச்சேரி மாவட்டம் வில்லியனூர் தாலுகாவில் உள்ள 52 அரியூர் வருவாய் கிராமத்தின் நிலமற்ற ஏழை SC/ST/ OEBC மக்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்குவதற்காக** கையகப்படுத்தக்கூடிய நிலத்தின் உரிமையாளர்கள் அல்ல என உறுதி அளிக்கிறோம்.

**இடம்: காரைக்கால்**

**தேதி: 29 /08/2024**

**டாக்டர். சுந்தர் ஆறுமுகம்- குழுத்தலைவர்**
**உதவி பேராசிரியர் - சமூகப்பணித்துறை**

**டாக்டர்.கலைஞர் மு. கருணாநிதி அரசு முதுகலை படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,**

**காரைக்கால் – 609 605**

**செல்வி. கே. வித்யா - உறுப்பினர்**
**சமூக பணியாளர்,**
**ஷைன் குழந்தைகள் இல்லம், புதுச்சேரி**

# உள்ளடக்கங்களின் பட்டியல்


| வரிசை எண் | உள்ளடக்கங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்மொழியப்பட்ட திட்டத்தின் தோற்றம் மற்றும் பின்னணி | 1 |
| 2. | சமூக தாக்க மதிப்பீட்டுக்குழு | 5 |
| 3. | சமூக தாக்க மதிப்பீட்டின் படிநிலை | 6 |
| 4. | சமூக தாக்க மதிப்பீட்டின் நோக்கங்கள் | 7 |
| 5. | சமூக தாக்க மதிப்பீட்டின் திட்டம் | 8 |
| 6. | பகுதி அ- பாதிக்கப்பட்ட மக்களின் சுயவிவரங்கள் | 10 |
| 7. | பகுதி ஆ- முக்கிய தாக்கப்பகுதிகள் | 13 |
| 8. | பகுதி இ - நிர்வாக சுருக்கம் | 22 |
| 9. | நிலத்தின் வரைப்படம் மற்றும் அதன் விவரங்கள் | 23 |
| 10. | கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலம் , திட்டத்திற்குத் தேவையான குறைந்தபட்ச பகுதி | 25 |
| 11. | செயலாக்கமுறை  ஏற்றுக்கொள்ளப்பட்டது | 28 |
| 12. | பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் | 31 |
| 13. | பரிந்துரைகள் | 31 |
| 14. | படிவம் IV- சமூக தாக்க மேலாண்மை திட்டம் | 33 |
| 15. | பொது விசாரணை பற்றிய அறிக்கை | 36 |
| | பின் இணைப்பு | |

# <u>முன்மொழியப்பட்ட நிலம் கையகப்படுத்துதலின் தோற்றம் மற்றும் பின்னணி</u>

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் இயக்குனரின், கடிதம் எண்- 3617/AWD/G3/LA/2017-18 மூலம் 00.42.06 அளவை நிலத்தைப் பெறுவதற்கான விரிவான முன்மொழிவை துணை ஆட்சியர் (வருவாய்) தெற்கு அவர்களிடம் ஒரு கோரிக்கையுடன் சமர்ப்பித்தார். மறு அளவை (R.S) எண்: 100/3pt என்ற நிலம் அரியூர் வருவாய் கிராமத்தின் நிலமற்ற ஏழை பட்டியலின சமூகத்தினர், பழங்குடியினர் மற்றும் பிற பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்காக நிலம் கோரப்பட்டது.

இதனைத்தொடர்ந்து வில்லியனூர் தெற்கு துணை ஆட்சியர் (வருவாய்) அவர்கள் தனது தகவலில் I.D எண் 037/DCRS/LA/2023 சமூக தாக்க மதிப்பீட்டை நடத்துவதில் இருந்து விலக்கு கோரியிருந்தார். மாண்புமிகு துணை நிலை ஆளுநரின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள (G.O. Rt. No. 31/2022-23/Wel/SCW/1806 தேதியிட்ட 29.03.2023) மறு அளவை எண் (RS No): 100/3 இல் 00-42-06 HAC அளவுள்ள தரிசு நிலத்தை மங்கலம் தொகுதியில் உள்ள அரியூர் வருவாய் கிராமத்தின் ஏழை மக்களுக்கு SC/ST/ OEBC இலவச வீட்டு மனைகளை வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்துதல், நியாயமான இழப்பீடு, வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம் (திருத்தம்) , 2015 இன் அத்தியாயம் –III பிரிவு 10 A (1) ஐ மேற்கோள் காட்டி சமூக தாக்க மதிப்பீட்டில் இருந்து விலக்கு கோருவதற்கான காரணத்தை குறிப்பிட்டுள்ளார்கள். பிரிவு 10 A (1)(c) பின்வருமாறு கூறுகிறது-

**"(c) மலிவு விலை வீடுகள் மற்றும் ஏழைகளுக்கு வீடு"**

நிலமற்ற ஏழை மக்களுக்கு வீடு வழங்கும் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் திட்டம் முன்மொழியப்பட்டதால், குறிப்பிட்ட அடிப்படையில் மேலதிகாரிகளிடம் விலக்கு கோரப்பட்டது.

மேலும், ரூ. 1,59,36, 096/- தொகைக்கான செலவின அனுமதியை 31.03.2023 தேதியிட்ட அரசாணை மூலம் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. G.O. Rt. No. 37/2022-23/Wel (SCW)/1806 மற்றும் அது அவரது அலுவலகத்தின் DDO கணக்கில் 31.03.2023 தேதியில் வைப்புத் தொகையாக (Deposited) செலுத்தப்பட்டுள்ளது.

ஆனால் எதிர்பாராத விதமாக, சமூக தாக்க மதிப்பீட்டை நடத்துவதில் இருந்து விலக்கு கோரும் முன்மொழிவை அவசர சட்டப்பிரிவைச் செயல்படுத்துவதன் மூலம் மட்டுமே விலக்கு அளிக்க முடியும் என்று மேற்கோள் காட்டி செயலாளர் (வருவாய்) மற்றும் மாவட்ட ஆட்சியரால் நிராகரிக்கப்பட்டது.

சட்டம் 40 பிரிவு 40(2) கூறுவது-

*"உட்பிரிவு (1) இன் கீழ் பொருத்தமான அரசாங்கத்தின் அதிகாரங்கள் இந்தியாவின் பாதுகாப்பு அல்லது தேசிய பாதுகாப்புக்கு அல்லது இயற்கை பேரழிவுகள் அல்லது வேறு ஏதேனும் அவசரநிலைகளால் எழும் எந்தவொரு அவசரநிலைக்கும் தேவையான குறைந்தபட்ச பகுதிக்கு பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்படும்."*

எனவே, ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனை வழங்குவதற்கான தற்போதைய கையகப்படுத்துதல் முறையை தொடரலாம் என்றும், சமூக தாக்க மதிப்பீட்டு ஆய்வு நடத்துவது கட்டாயம் என்றும் தெளிவாக அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பிரகடனப்படுத்தப்பட்ட எந்தவொரு அரசாணையும் ஆறு மாதங்கள் மற்றும் ஆறு வாரங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்றும், கடைசியாக அறிவிக்கப்பட்ட அரசாணை திருத்தச்சட்டமாக இயற்றப்படவில்லை என்றும் காரணம் காட்டி, முன்மொழிவு கோப்பு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே, நிலம் தேவைப்படும் (ADW & STW) அமைப்பால் ஒரு புதிய முன்மொழிவையும் கோரப்பட்டது.

புதுச்சேரி RFCTLARR விதிகள், 2016 விதி 7 (6) இன் படி, யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் மாநில சமூக தாக்க மதிப்பீட்டு பிரிவு அமைக்கப்பட்டது, இது 13.04.2017 தேதியிட்ட G.O. Ms.No. 7 அரசாணை மூலம் அறிவிக்கப்பட்டது. RFCTLARR சட்டம், 2013 இன் கீழ் திட்டமிடப்பட்டுள்ள செயல்பாடுகளை செயல்படுத்தும் அதிகாரிகள் பின்வருமாறு:

| **சமூக தாக்க மதிப்பீட்டு பிரிவு** | **அதிகாரம்** |
|---|---|
| தலைவர் | சிறப்பு செயலாளர் (வருவாய்) |
| உறுப்பினர் | இயக்குனர்,<br>குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகார இயக்குநரகம், புதுச்சேரி |
| உறுப்பினர் | இயக்குனர்,<br>திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறை, புதுச்சேரி |

பின்னர், சமூக தாக்க மதிப்பீட்டுக்குழு உருவாக்கப்பட்டு, 05/07/2024 தேதியிட்ட No.696/Rev/B1/2024/8306 ஆணையின் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இறுதியாக, சமூகத் தாக்க மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டு மற்றும் பிரிவு 3(v) இன் படி 31 அக்டோபர் 2023 தேதியிட்ட அதிகாரப்பூர்வ அரசிதழில் அது அறிவிக்கப்பட்டது.

## திட்டம் மற்றும் அதன் தேவை பற்றி

நிலமற்ற ஏழை SC/ST/ OEBC மக்களுக்கு இலவச வீட்டு மனைகளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்ட நிலம் கையகப்படுத்தப்படுகிறது. நிலம் தேவைப்படும் அமைப்பு ஒரு அரசாங்கத்துறை அதாவது ADW & STW துறை ஆகும். புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த நிலமற்ற ஏழைகளின் பெரும் தேவையின் அடிப்படையில் தற்போதைய திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கையகப்படுத்தப்பட்ட நிலம் ஒவ்வொன்றும் மூன்று சென்ட் அளவுள்ள பல்வேறு மனைகளாக பிரிக்கப்பட்டு நிலமற்ற ஏழைப் பயனாளிகள் 138 பேரைக் கண்டறிந்து, அதில் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு நிலங்கள் விநியோகிக்கப்படும்.

வீட்டு மனைகளை வழங்குவதற்கான தேவையான தகுதி வரம்புகள் பின்வருமாறு-

இந்திய நாட்டின் குடிமகன் / குடிமகளாக இருக்க வேண்டும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு குறையாமல் குடியிருந்து பூர்வீக அல்லது நிரந்தர குடியிருப்பாளராக இருக்க வேண்டும் மற்றும் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.

பட்டியலிடப்பட்ட சாதியை சார்ந்தவராகவும், வீடற்ற நபராகவும் மற்றும் அவரது குடும்பத்தில் இருக்கும் எந்த உறுப்பினருக்கும் வீடு அல்லது வீட்டுமனைகள் இல்லாதவராகவும் இருக்க வேண்டும்.

வீட்டுமனைகள் பொறுத்தவரை நிலம் ஒதுக்கப்பட்டால் நிலத்தில் ஒரு வீட்டைக் கட்டுவதற்கான நேர்மையான நோக்கத்தைக்கொண்டவராக இருக்க வேண்டும்.

பட்டியல் அல்லாத சாதியினரும் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் இந்த முன்மொழிவு குறிப்பிடுகிறது. விதி 3 இன் கூற்று (ii) இன் படி, குறிப்பிட்ட கிராமத்தில் விநியோகிக்கக்கூடிய வீட்டுமனைகள்/வீடுகள் மொத்த எண்ணிக்கையில் இருபது சதவீதத்திற்கு மிகாமல் இருக்கப்பட வேண்டும் என்பதற்காக, இந்த விதிகளில் உள்ள பிற கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பொருந்தும் நபர்களுக்கு வழங்கப்படலாம்.

இந்த நிலம் உலர் நில வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது மேலும் நிலத்தடி நீர் பயன்படுத்தப்படும் இடம் நல்ல மண் அமைப்பை கொண்டுள்ளது.

## நில ஆய்வு மற்றும் தேர்வுக்குழு

## நில ஆய்வு மற்றும் தேர்வுக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | குழு உறுப்பினர்கள் | பதவி |
|---|---|---|
| 1 | அரசு செயலாளர் (நல்வாழ்வு துறை), புதுச்சேரி | தலைவர் |
| 2 | இயக்குநர், ஆதி திராவிடர் நலத்துறை, புதுச்சேரி | உறுப்பினர் செயலாளர் |
| 3 | இயக்குநர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, புதுச்சேரி | உறுப்பினர் |
| 4 | துணை ஆட்சியர் (வருவாய்) தெற்கு, வில்லியனூர் , புதுச்சேரி | உறுப்பினர் |
| 5 | நிர்வாக பொறியாளர், நீர்ப்பாசனப் பிரிவு, பொதுப்பணித்துறை, புதுச்சேரி | உறுப்பினர் |
| 6 | முதுநிலை நகர திட்டமிடுபவர், நகரம் மற்றும் கிராம அமைப்பு துறை, புதுச்சேரி | உறுப்பினர் |
| 7 | இயக்குநர், மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை, புதுச்சேரி | உறுப்பினர் |
| 8 | ஆணையர், பாகூர் கொம்யூன் பஞ்சாயத்து, பாகூர் , புதுச்சேரி | உறுப்பினர் |
| 9 | ஆணையர், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து , வில்லியனூர் , புதுச்சேரி | உறுப்பினர் |
| 10 | ஆணையர், மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து, திருபுவனை , புதுச்சேரி | உறுப்பினர் |
| 11 | ஆணையர், நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்து, திருபுவனை , புதுச்சேரி | உறுப்பினர் |

இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்திற்கு புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் நிலங்களை தேர்வு செய்வதற்காக 17.08.2017, 21.08.2017 மற்றும் 22.08.2017 ஆகிய தேதிகளில் நில ஆய்வு மற்றும் தேர்வுக்குழு கூடியது. புதுச்சேரியில் உள்ள பல்வேறு கிராமங்களைச்சேர்ந்த நிலமற்ற ஏழை பட்டியலின மக்களிடம் பெரும் கோரிக்கைகள் எழுந்தது, இதனை தொடர்ந்து புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 27.06.2017 தேதியிட்ட G.O. M.S. எண் 11 ஆணையின்படி இடத்தேர்வுக்குழு அமைக்கப்பட்டு மேற்படி உறுப்பினர்களை உள்ளடக்கியக்குழு நிலத்தை ஆய்வு செய்தது.

நில உரிமையாளரின் ஒப்புதலின் பேரில், முன்மொழியப்பட்ட நிலத்தை கையகப்படுத்தக்குழு பரிந்துரைத்தது.

இந்த முன்மொழியப்பட்ட திட்டத்தை தொடர்வதற்காக இறுதி மற்றும் முக்கியமான நடவடிக்கையாக, புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் வருவாய் அதிகாரி அவர்கள், மேற்கூறிய நிலத்தை கையகப்படுத்துவதற்கான தற்காலிக மதிப்பிடப்பட்ட செலவை 1,59,36,096/- வைப்புத்தொகை (deposit) செய்யதெரிவித்தார். ஆரம்பத்தில், இந்த முன்மொழிவு மாண்புமிகு துணைநிலை ஆளுநரின் நிர்வாக ஒப்புதலைப் பெறுவதற்கான அறிவுறுத்தலுடன் திருப்பி அனுப்பப்பட்டது. அதன்பிறகு சட்டத்தின் விதி 3 (1) இன் படி , தேவையான ஒப்புதல் பெறப்பட்டு பின்னர் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டது. நிதித்துறையிலிருந்தும் சுமுகமான செய்தியும் வந்தது என்பதை 31.03.2023 தேதியிட்ட I.D . No. 21882/CON/FD/FC/A221882/CON/FD/FC/A2, ஆணையின் வாயிலாக பெறப்பட்டது

## <u>சமூக தாக்க மதிப்பீட்டுக்குழு :</u>

புதுச்சேரி மாவட்டம் வில்லியனூர் தாலுகாவில் உள்ள 52 அரியூர் வருவாய் கிராமத்தின் நிலமற்ற ஏழை SC/ST/ OEBC மக்களுக்கு இலவச வீட்டு மனைகளை வழங்குவதற்கு நிலம் கையகப்படுத்துதல் நோக்கத்திற்காக நியாயமான இழப்பீடு மற்றும் நிலம் கையகப்படுத்துதலில் வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம், 2013 பிரிவு 4, படி அரசு இழப்பீடு வழங்கவும் மற்றும் சமூக மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்வதற்கும் நிலம் கையகப்படுத்துவதற்கும் ஜூலை 5 2024 தேதியில் No. 696/Rev/B1/2024/8306 அரசாணை வெளியிட்டது.

**சமூக தாக்கக்கணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளனர்:**

| வரிசை எண் | பெயர் & பதவி | பாலினம் | தகுதிகள் |
|---|---|---|---|
| 1 | டாக்டர். சுந்தர் ஆறுமுகம்- குழுத்தலைவர்<br>உதவி பேராசிரியர் - சமூகப்பணித்துறை<br>டாக்டர்.கலைஞர் மு. கருணாநிதி அரசு. முதுகலை படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், காரைக்கால் – 609 605 | ஆண் | M.S.W, M.Phil., Ph.D |
| 2. | செல்வி. கே. வித்யா - உறுப்பினர்<br>சமூக பணியாளர்,<br>ஷைன் குழந்தைகள் இல்லம், புதுச்சேரி | பெண் | M.S.W |

## சமூகத் தாக்க மதிப்பீட்டுப் பிரிவின் படிநிலை

**CHAIRMAN**

**SPECIAL SEC. (REV. CUM CHAIRMAN –STATE SIA UNIT**

**DIRECTOR PLANNING**

**DIRECTOR CIVIL SUPPLIES**

**SIA TEAM**

## சமூக தாக்க மதிப்பீட்டின் நோக்கங்கள்

சமூக தாக்க கணிப்புக்குழுவிற்கு ஜூலை 5,2024 அன்று No.696/Rev/B 1/2024/8306 ஆணையின் மூலம் உத்தரவு தெரிவிக்கப்பட்டது, அவற்றில் நிலம் கையகப்படுத்துவதன் மூலம் மக்கள் மற்றும் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்து தீர்மானிக்கவும். இடப்பெயர்வு, மறுவாழ்வு, இழப்பீடு மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் சமூக தாக்க கணிப்புக்குழு உதவும். சமூக தாக்க மதிப்பீட்டின் ஒட்டுமொத்த நோக்கம் நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை சீராகவும், ஒளிவு மறைவு இல்லாமல் வெளிப்படையாகவும், பங்கேற்புடனும், மனிதாபிமான முறையில் தகவலறிந்தது செயல்படுத்துவது .

## தற்போதைய நிலம் கையகப்படுத்துதலில் சமூக தாக்க ஆய்வு பின்வருவனவற்றை உறுதிப்படுத்தி மற்றும் நியாயப்படுத்துகிறது -

- கையகப்படுத்தப்படும் நிலம் பொது நோக்கத்திற்காக பயன்படும்.
- கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் சரியான இடத்தைக்கண்டறிவதில் பல்வேறு துறைகள்/அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல் .
- பொது நோக்கத்திற்காக கையகப்படுத்தப்படும் நிலத்தின் அளவு மிகக்குறைந்த அளவே ஆகும்.
- மாற்று இடத்தில் நிலம் கையகப்படுத்துவது பரிசீலிக்கப்பட்டு, சாத்தியமாகவில்லையா என்பதை அறிய வேண்டும்.
- ஒட்டுமொத்த சாத்தியமான நன்மைகள் சமூக தாக்கங்கள் மற்றும் மதிப்பீட்டு பதிவுகளை விட அதிகமாக உள்ளதா என்பதை அறிய வேண்டும்.
- அசையும் மற்றும் அசையா சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்பதை அறிய வேண்டும்.
- பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் இடம்பெயர்வதற்கு வாய்ப்புள்ள குடும்பங்களின் எண்ணிக்கையைக்கண்டறிய வேண்டும்.
- RFCTLARR விதிகள் 2016 இன் விதிகள் 8 & 9 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் மற்ற அனைத்து விதிமுறைகள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் நோக்கங்களையும் இக்குழு உறுதிப்படுத்த வேண்டும்.

**அதிகாரப்பூர்வ உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட நோக்கங்களைத் தவிர, சமூக தாக்க கணிப்புக்குழு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியை மேலும் தொடர வேறு சில நோக்கங்களையும் கொண்டிருக்கிறது சமூகத் தாக்க மதிப்பீடு வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய வேறு சில நோக்கங்கள் பின்வருமாறு:**

- ❖ கையகப்படுத்தப்பட்ட நிலம் விவசாயம் சார்ந்த நிலமா, நீர் பாசனத்திற்கான நிலமா அல்லது பயிர் விளையும் நிலமா என்பதை கண்டறியவும்.
- ❖ வீடுகளுக்குச்செல்வதற்கும் / கள ஆய்வு செய்வதற்கும் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்/ கட்சிகள்/ சமூகங்களின் சமூக-பொருளாதாரப் பின்னணிச்சூழல், கலாச்சார விவரங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொள்வது,
- ❖ முன்மொழியப்பட்ட நிலம் கையகப்படுத்துதலின் சமூக-பொருளாதார தாக்கத்தை ஆய்வு செய்யவும்.
- ❖ வழங்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து, சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பித்தல்.
- ❖ வகுக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி பொது விசாரணை நடத்துதல்.
- ❖ நில உரிமையாளருக்கு தொடர்புடைய வழக்குகள் மற்றும் மீள்குடியேற்றம் மற்றும் இழப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேம்படுத்த சமூக தாக்க மேலாண்மை திட்டத்தை (SIMP) தயாரித்தல்.

## சமூக தாக்க மதிப்பீட்டுத்திட்டம்

சமூக தாக்க மதிப்பீட்டை முடித்து அறிக்கையை சமர்ப்பிக்க சமூக தாக்க கணிப்புக்குழுவிற்கு இருபது (24) நான்கு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சமூக தாக்க கணிப்புக்குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள், விவரங்கள் மற்றும் நேர வரம்பு ஆகியவற்றை கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | கட்டம்/ செயல்பாடுகள் | விவரங்கள் | நேர வரம்பு |
|---|---|---|---|
| 1. | தயாரிப்பு செயல்பாடு | I. திட்டத்தின் அறிக்கை மற்றும் மதிப்பாய்வு சேகரிப்பு<br>II. தளம் மற்றும் அதன் விவரங்களை புரிந்துகொள்வதற்கான விரைவான ஆய்வு<br>III. சமூக-கலாச்சார செயல்பாடுகளை அறிந்திருத்தல். | |

| | | | |
|---|---|---|---|
| 2. | கணக்கெடுப்பு நடவடிக்கைகள் | I. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலைமைகள் பற்றிய தரவு சேகரிப்பு.<br>II. ஒவ்வொரு குடும்பத்தின் அசையும் சொத்துக்களின் பட்டியல், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்குச் சொந்தமான பிற சொத்துக்களின் விவரங்களும் சேகரிக்கப்படும்.<br>III. இழப்பின் வகை மற்றும் அதன் விரிவாக்கம் கண்டறியப்பட வேண்டும். | சமூகத் தாக்க மதிப்பீட்டு ஆய்வு தொடங்கிய நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அனைத்து நடவடிக்கைகளும் முடிக்கப்பட வேண்டும். |
| 3. | மதிப்பீடு தாக்கங்கள் | I. நிலம், கட்டமைப்புகள் மற்றும் நிலம் மற்றும் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சொத்துக்கள் மீதான தாக்கம்.<br>II. வாழ்வாதார இழப்புகள்<br>III. சமூக-கலாச்சார தாக்கம் | |
| 4. | சமூக தாக்க மேலாண்மை திட்டம்(SIMP) | I. பாதிப்பு, நேரடி மற்றும் மறைமுக வாழ்வாதார இழப்புகள், சமூக-கலாச்சார தாக்கம் ஆகியவற்றுக்கான தணிப்பு நடவடிக்கைகள்.<br>II. திட்டத்தின் நன்மைகள் மற்றும் திட்டத்தின் இந்த செலவுகளின் தாக்கம் மற்றும் தாக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான தன்மை மற்றும் செலவு. | |
| 5. | ஒப்புதல் மற்றும் பொது விசாரணை | SIMP இல் பொது விசாரணையின் பரிந்துரைகளை இணைத்தல் | |
| 6. | அறிக்கைகள் மற்றும் பிற கணிப்பொறி உள்ளீடு / தட்டச்சு வேலைகளைத் தயாரித்தல் | புதுச்சேரி RFCTLARR சட்டம் 2016ன் படிவம் III இல் சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | |

புதுச்சேரி RFCTLARR சட்டம், 2016 இன் விதிகள் 8, 10 மற்றும் 11 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அனைத்து நிபந்தனைகள் பொருந்தும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பகுதி அ

## பாதிக்கப்பட்ட மக்களின் சுயவிவரங்கள்

**சமூக - பொருளாதாரம் மற்றும் கலாச்சார விவரக்குறிப்பு (பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மீள்குடியேற்ற தளம்)**

முன்மொழியப்பட்ட நிலம் கையகப்படுத்துதலால் எந்தவிதமான மீள்குடியேற்றமும் ஏற்படாததாலும், மேலும் நிலம் காலியான மற்றும் தரிசு நிலமாக இருப்பதாலும், அதை கையகப்படுத்துவதால் எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே, திட்டப் பகுதியில் உள்ள மக்களின் சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார விவரங்கள் இதற்கு பொருந்தாது. இருப்பினும், சமூக தாக்க கணிப்புக்குழு நிலம் கையகப்படுத்தப்படும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஒரு சுருக்கமான குடும்ப சுயவிவரத்தை பதிவு செய்ய விரும்புகிறது.

**குடும்பத் தலைவரின் பெயர்** - திரு. எம். தனஞ்செயன்

**நில விவரங்கள்** - மறு அளவை எண். 100/3

| குறிப்பிட்ட சுயவிவரம் | விவரங்கள் | | | |
|---|---|---|---|---|
| வயது | 76 ஆண்டுகள் | | | |
| இனம் | **ஆண்** | | பெண் | |
| சாதி | கவுண்டர் | | | |
| மதம் | **இந்து** | முஸ்லிம் | கிறிஸ்துவர் | |
| கல்வி நிலை | **தொடக்கப்பள்ளி படிப்பு** | உயர்நிலைப் பள்ளி படிப்பு | மேல்நிலை பள்ளி படிப்பு | கல்லூரி படிப்பு |
| உடல் நலம் | நல்ல நிலை | **சீரான நிலை** | சீறற்ற நிலை | |
| ஊட்டச்சத்து நிலை | **நல்ல நிலை** | சீரான நிலை | சீறற்ற நிலை | |
| வறுமை | குறைந்த வருமானம் | **நடுத்தர வருமானம்** | அதிக வருமானம் | |

குடும்ப வகை - தனி குடும்பம் **கூட்டுக் குடும்பம்**

**குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் –**

| **வரிசை எண்** | **குடும்பத் தலைவருக்கு தொடர்பு** | **வயது** | **இனம்** | **கல்வி நிலை** | | | | **உடல்நலம்** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | **தொடக்கப்பள்ளி படிப்பு** | **உயர்நிலைப் பள்ளி படிப்பு** | **மேல்நிலை பள்ளி படிப்பு** | **கல்லூரி படிப்பு** | **நல்ல நிலை** | **சீரான நிலை** | **சீரற்ற நிலை** |
| 1 | மனைவி | 72 | பெண் | **தொடக்கப்பள்ளி படிப்பு** | | | | **சீரான நிலை** | | |
| 2 | மகள் | 49 | பெண் | -- | | | ஆம் | **நல்ல நிலை** | | |
| 3 | மகன் | 47 | ஆண் | -- | | | ஆம் | **நல்ல நிலை** | | |
| 4 | மகன் | 45 | ஆண் | -- | | | ஆம் | **நல்ல நிலை** | | |
| 5 | மகன் | 44 | ஆண் | -- | | | ஆம் | **நல்ல நிலை** | | |
| மேலும் பேரக்குழந்தைகள். | | | | | | | | | | |

**விளக்கக் குறிப்பு:**

சமூக தாக்க கணிப்பு குழு தொலைபேசியில் தொடர்பு கொண்டு நில உரிமையாளர் வீட்டில் தான் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டு ஜூலை 21 ,2024 தேதியன்று அவரை சந்திக்க அவரது வீட்டிற்கு சென்றனர் பிறகு அவருடன் கலந்து உரையாடிய போது பின்வரும் விவரங்கள் பெறப்பட்டன.


நில உரிமையாளர் கூட்டுக் குடும்பத்தில் வசித்து வருகிறார். அவரது மகள் திருமணமாகி சென்னையில் வசித்து வருகிறார், அவரது மகன்களில் ஒருவர் சென்னையில் குடியேறி தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். நில உரிமையாளர் தற்போது தனது இரண்டு மகன்கள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் ஒரே வீட்டில் வசித்து வருகிறார். நில உரிமையாளருக்கு நிரந்தரமான வருமானம் எதுவும் இல்லை, மேலும் அவர் விவசாயம் மற்றும் அது தொடர்பான வேலைகளின் வருமானத்தையே நம்பியுள்ளார். அவர் சில கால்நடைகளையும் வைத்திருக்கிறார் மேலும் அவர் வசிக்கும் வீடு அவரது சொந்த வீடாகும். நில உரிமையாளர் தனது நிலத்தை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டத்திற்கு கொடுக்கத்தயாராக இருப்பதாக கூறினார். மேலும் அவர் தனது கடின உழைப்பினால் சம்பாதித்த பணத்திலிருந்து நிலத்தை வாங்கியதாகவும், அதனால் இழப்பீட்டுத்தொகையை அரசு விரைவில் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## சமூக தாக்க கணிப்புக்குழுவின் பரிந்துரைகள்

சமூக தாக்க கணிப்புக்குழு, நில உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க பரிந்துரைக்க விரும்புகிறது. தற்போதுள்ள கட்டண விகிதத்தின்படி கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.




**சமூக தாக்க கணிப்புக்குழு -வீட்டு வருகையின் போது நில உரிமையாளரை சந்தித்தபோது**



## பகுதி ஆ- முக்கிய தாக்கப்பகுதிகள்

| வரிசை எண் | முக்கிய பாதிப்பு பகுதிகள் | சமூக தாக்க கணிப்புக்குழுவின் கருத்துக்கள் |
|---|---|---|
| 1. அ | நிலம், வாழ்வாதாரம் மற்றும் வருமானம் மீதான தாக்கம் | கையகப்படுத்த உத்தேசித்துள்ள நிலம் காலியாகவும், தரிசு நிலமாகவும் உள்ளது.<br>நிலத்தில் எந்த எதிர்மறையான தாக்கமும் ஏற்படப் போவதில்லை அதற்கு பதிலாக, காலியாக உள்ள நிலத்தில் வருகின்ற சில ஆண்டுகளில் 138 தனி வீடுகள் இருக்கும். எனவே, தரிசு நிலம் முழுமையான குடியிருப்புப் பகுதியாக மாறும்.<br>மேலும், காலியாகவும், தரிசாகவும் இருப்பதால் தற்போது யாருக்கும் எந்த வாழ்வாதாரத்தையும் வருமானத்தையும் வழங்காது எனவே, சுருக்கமாக நிலம் கையகப்படுத்திய பின் வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தில் எந்த பாதிப்பும் இல்லை. |
| . ஆ. | உள்வீட்டு வேலைவாய்ப்பு முறைகள் | ஆனந்தபுரத்திற்கு மேற்கேவும் கிழக்கேவும் இருபுறமும் பல குடியிருப்பு வீடுகள் உள்ளன . மேலும் இந்தக் குடும்பங்கள் தங்களுடைய சொந்த வேலைவாய்ப்பு முறையைக் கொண்டிருக்கின்றன, அது எந்த வகையிலும் பாதிக்கப்படப் போவதில்லை.<br>இலவச வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தப்படுவதால், பயனாளிகள் பெரும்பாலும் தினக்கூலி வேலைகள் செய்பவர்களாக இருக்கலாம். இந்த நிலத்தில் குடியேறப்போகிறவர்கள் பணியிடத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இந்த நிலத்தில் குடியேறிய பிறகு, அவர்கள் வேலை செய்யும் இடம் வெகு தொலைவில் இருக்கலாம் மற்றும் பயணச்செலவுகள் செய்ய வேண்டியிருக்கும். எனவே, அவர்கள் தங்கள் பணியிடத்தை மாற்றலாம். இதனால் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலம் காலியாகவும் தரிசு நிலமாகவும் இருப்பதால், நிலத்தின் வேலை வாய்ப்புகளில் தாக்கம் துளியும் இருக்காது |

| | | |
|---|---|---|
| . இ. | வருமான நிலைகள் | **பொருந்தாது** |
| ஈ. | உணவு பாதுகாப்பு | **பொருந்தாது** |
| உ. | வாழ்க்கை தரம் | அருகில் வசிக்கும் மக்களின் தற்போதைய வாழ்க்கைத்தரம் எந்த வகையிலும் பாதிக்கப்படாது. ஆனால், இந்தப் பகுதியில் வந்து குடியேறும் பயனாளிகள் வசிக்க சொந்த வீடு இருக்கும். அதன்பிறகு, அவர்கள் இப்போது செய்வது போல் தங்கள் வீடுகளுக்கு வாடகை செலுத்துவதில் செலவு செய்ய மாட்டார்கள். இது நிச்சயமாக அவர்களுக்கு பணத்தை மிச்சப்படுத்தும். எனவே, இயற்கையாகவே இதன் மூலம் அவர்கள் பொருளாதார பலன் அடைவார்கள், மேலும் இந்த பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக அவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| ஊ.. | உற்பத்தி அளவின் மீதான அணுகுமுறை மற்றும் கட்டுப்பாடு | நிலம் தற்போது காலியாகவும், தரிசு நிலமாகவும் இருப்பதால் எதிர்காலத்தில் தனி வீடுகள் கட்டப்படலாம். இதன் காரணமாக, அருகிலுள்ள நிலங்களுக்கு செல்வதற்கு ஒருபோதும் இடையூறு ஏற்படாது என்று கருதப்படுகிறது. அருகிலுள்ள பகுதிகளை இணைக்கும் சாலைகளுக்கு சரியான அணுகுமுறையுடன் வீட்டு தளங்கள் தயாரிக்கப்படும். அருகிலுள்ள பகுதிகளில் பயிரிடப்படுவதில்லை. எனவே, எந்தவொரு உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் இடையூறு ஏற்படாது. |
| எ. | பொருளாதாரப் பொறுப்பு மற்றும் அதிர்வதம் | கையகப்படுத்தப்படும் நிலத்தை தவிர, நில உரிமையாளருக்கு வேறு சில விவசாய நிலங்களும் உள்ளன மற்றும் சொந்த குடியிருப்பு வீடும் உள்ளது. நிலம் உரிமையாளருக்கு இது ஒரு சொத்தாக இருந்தாலும் நிலையான வருமானம் தருவதில்லை. அதனால் இழப்பீட்டுத் தொகையானது அவருக்கு மிகுந்த உதவியாக இருக்கும், மேலும் இந்த நிலத்தை கையகப்படுத்துவதால் எந்த வித பாதிப்பும் ஏற்படாது. |
| ஏ. | உள்ளூர் பொருளாதாரத்தின் சீர்குலைவு | உள்ளூர் பொருளாதாரத்தில் எந்த வித இடையூறும் ஏற்படக்கூடாது. |

| | | |
|---|---|---|
| | | மாறாக, கையகப்படுத்தப்படும் நிலத்தில் பல வீடுகள் கட்டப்படுவதால், உள்ளூர் பொருளாதாரம் மேம்படும் .<br>புதிய வீடுகள் வந்தால், குடும்பங்கள் தங்கள் அன்றாடத்தேவைகளுக்கு அருகிலுள்ள கடைகளில் இருந்து உள்ளூர் நுண்ணிய பொருளாதாரத்தை நிரப்பும்.<br>அதனால், உள்ளூர் பொருளாதாரத்தில் எந்த இடையூறும் ஏற்படாது. |
| ஐ. | வறுமை ஆபத்து | நில உரிமையாளருக்கு வறுமை ஏற்படும் அபாயம் இருக்காது. |
| ஒ. | வாழ்வாதாரத்திற்கான மாற்று வழிகளுக்கான பெண்களுக்கான அணுகுமுறைகள் | **பொருந்தாது** |
| 2. அ. | நிலத்தடி, இயற்கை மற்றும் பிற வளங்கள் மீதான தாக்கங்கள் | கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலம் காலியாகவும் தரிசு நிலமாகவும் உள்ளதால் தேவையற்ற முள் புதர்கள் நிறைந்துள்ளது மேலும் அதில் நான்கு மின்விளக்கு கம்பங்கள் உள்ளன. ஒன்று கிழக்கு மேற்கு சாலையின் தென்மேற்கு விளிம்பில் உள்ளதால் அதை அகற்ற வேண்டிய அவசியமில்லை மேலும் இது ஒதுக்கப்பட்டு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச நிலத்தின் கீழ் வருகிறது மீதம் மூன்றும் நிலத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளன. தென்கிழக்கில் உள்ள மின்விளக்கு கம்பம் வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச நிலத்தின் பின்புறத்தில் உள்ளதால் அதை அகற்ற வேண்டிய அவசியமில்லை.<br>கிழக்குப்பகுதியில் நிலத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள மற்ற இரண்டு மின்விளக்கு கம்பங்கள் அகற்றப்பட வேண்டும்.<br>மின்விளக்கு கம்பங்களை அகற்றும் போது போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், இந்த விளக்கு கம்பிகளை மாற்றும் போது அல்லது அகற்றும் போது, மின்சாரம் தடைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் குடியிருப்பு வீடுகளுக்கு இது குறித்து முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும், இதனால் அவர்கள் முன்கூட்டியே தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும். |

| | | |
|---|---|---|
| ஆ. | வாழ்வாதாரத்திற்கான நிலம் மற்றும் பொதுவான சொத்து இயற்கை வளங்கள் மீதான அழுத்தங்கள் | வாழ்வாதாரம் பாதிக்கப்படாது. நிலத்தில் உள்ள ஒரே வளங்கள் மின்விளக்கு கம்பங்கள் மட்டுமே, 2(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாற்றப்பட வேண்டும். இரண்டு மின்விளக்கு கம்பங்களும் அகற்றப்பட வேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும். |
| 3. அ | தற்போதுள்ள சுகாதார மற்றும் கல்வி வசதிகளின் திறன் | இப்பகுதியில் 138 குடும்பங்கள் புதிதாக குடியேறவுள்ளதால், சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட துறையினர் கணக்கெடுப்பு நடத்தி, குடும்பத்தின் அளவு மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், தேவையான வசதிகளை மேம்படுத்தலாம். |
| ஆ. | வீட்டு வசதிகளின் திறன் | நிலம் காலியாகவும், தரிசு நிலமாகவும் இருப்பதால், புதிய வீடுகள் கட்டும் திறன் உள்ளது. வல்லுநர்கள் மட்டுமே சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப நிலத்தை அடுக்குகளாக பிரிக்கப் போகிறார்கள். |
| இ. | உள்ளூர் சேவைகளை வழங்குவதில் அழுத்தம் | உள்ளூர் சேவைகளை வழங்குவதற்கான அழுத்தம் திடீரென பாதிக்கப்படப் போவதில்லை. இது கட்டம் வாரியாக நடக்கும். எனவே, சம்பந்தப்பட்ட உள்ளூர் சேவை வழங்குபவர் தனது நிதித் திறன் மற்றும் தேவைகளைப் பொறுத்து தனது விநியோகத் திறனை மேம்படுத்தலாம். இது உடனடி கவலைக்கு ஒரு முக்கிய காரணம் அல்ல. |
| ஈ. | மின்சாரம் மற்றும் நீர் வழங்கல், சாலைகள், சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை ஆகியவற்றின் போதுமான அளவு | இந்த நிலத்தில் புதிதாக 138 வீடுகள் கட்டப்பட உள்ளதால், குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிக்கான கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும். நிலம் கையகப்படுத்துதலின் நோக்கம் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு முன்கூட்டியே தெரிவித்து. அவர்களின் எதிர்கால முன்மொழிவுகளைத்தயாரிக்க போதுமான அவகாசம் வழங்கப்பட வேண்டும். |
| இ. | ஆழ்துளை கிணறுகள், தற்காலிக குடிசைகள் போன்ற தனியார் சொத்துக்கள் மீதான தாக்கம். | கையகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நிலத்தில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் தற்காலிக குடிசைகள் உள்ளன. நிலத்தின் வடமேற்கு மூலையில் ஒரு செல்போன் கோபுரம்/செல்போன் டவர் உள்ளது. ஆனால், கோபுரம் அமைக்கப்பட்டுள்ள அந்த நிலம், தற்போது கையகப்படுத்தும் நிலத்தின் கீழ் வரவில்லை. |

| | | |
|---|---|---|
| 4. | உடல்நல பாதிப்பு | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலத்தில் பயனாளிகளுக்காக தனி வீடு கட்டப்படும் போது, அதை ஒட்டிய பகுதிகளில் வசிப்பவர்களின் உடல் நலத்தில் பெரிய பாதிப்பு ஏற்படப் போவதில்லை. |
| அ. | குடியேற்றத்தால் உடல்நல பாதிப்பு | கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலம் முற்றிலும் குடியிருப்பு பகுதி. எனவே, இந்த நிலத்தில் குடியேற வருபவர்கள் குடியேற்றம் காரணமாக எந்தவிதமான உடல்நல பாதிப்புகளையும் / ஆபத்துகளையும் சந்திக்க மாட்டார்கள். |
| ஆ. | சிறப்பு முக்கியத்துவம் கொண்ட திட்ட நடவடிக்கைகளால் உடல்நல பாதிப்பு:<br>i) பெண்களின் ஆரோக்கியம்<br>ii) வயதானவர்கள் மீதான தாக்கம் | சிறிய அளவிலான தனிநபர் வீடுகள் கட்டுவதற்கு மட்டுமே நிலம் பயன்படுத்தப்படும் என்பதால் பெண்கள் மற்றும் முதியவர்களின் ஆரோக்கியத்தில் அதிக பாதிப்பு இருக்காது எனவே, வரவிருக்கும் திட்ட நடவடிக்கைகளால் சுகாதார பாதிப்பு இல்லை. |
| 5. | கலாச்சாரம் மற்றும் சமூக ஒற்றுமை மீதான தாக்கம் | யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் ஒட்டுமொத்த கலாச்சாரமும் சமூக ஒற்றுமையும் ஒரே மாதிரியாக உள்ளது. எனவே, இந்தப் பகுதியில் குடியேற வரும் மக்கள் தற்போதுள்ள கலாச்சாரம் மற்றும் சமூக ஒற்றுமையை எந்த விதத்திலும் பாதிக்க மாட்டார்கள் |
| அ. | உள்ளூர் அரசியல் கட்டமைப்புகளின் மாற்றம். | ஆம், அரசியல் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படலாம். 138 புதிய வீடுகள் மற்றும் அதன் குடும்பங்கள் தொகுதியில் புதிய வாக்காளர்களாக மாறுவார்கள். எனவே, தற்போது இங்கு வசிப்பவர்களுடன் ஒப்பிடுகையில், புதிதாக குடியேறியவர்கள் வேறு சில அரசியல் கட்சிகளுடன் இணைந்திருக்கலாம். புதிய வாக்காளர்களை கவருவது உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு சவாலாக இருக்கலாம். ஆனால் இதுவும் ஒரே நாளில் நடந்துவிடாது. இது ஒரு மெதுவான மற்றும் படிப்படியான செயல்முறையாகும், இது காலப்போக்கில் இயல்பாகிவிடும் |

| | | |
|---|---|---|
| ஆ. | மக்கள்தொகை மாற்றம் | ஆம், மக்கள்தொகை மாற்றம் நிச்சயம் ஏற்படும். மொத்தம் 138 புதிய வீடுகள் மற்றும் குடும்பங்களுடன், மொத்த மக்கள்தொகையில் மாற்றம் ஏற்படும். ஆனால், வரும் காலங்களில் இங்கு குடியேறப் போகிறவர்களின் மக்கள்தொகையைப் பற்றித் தெரியாமல் , இப்போதைக்கு பெரிதாக எதுவும் சொல்ல முடியாது. |
| இ. | பொருளாதாரத்தில் மாற்றம் - சூழலியல் சமநிலை | **பொருந்தாது** |
| ஈ. | விதிமுறைகள், நம்பிக்கைகள், மதிப்புகள் மற்றும் கலாச்சார வாழ்க்கை மீதான தாக்கங்கள் | புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கையகப்படுத்தப்படும் நிலத்தில் குடியேறப்போவதால், மக்களின் நெறிமுறைகள், மதிப்புகள் , நம்பிக்கைகள் மற்றும் கலாச்சார வாழ்க்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஏனென்றால், அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம் ஆனால் அனைத்தும் ஒரே மாதிரியானவை தான். கலாச்சார வாழ்வில் சிறிய வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் அது எல்லா இடங்களிலும் பொதுவான ஒன்றுதான். |
| இ. | இடப்பெயர்ச்சியின் அழுத்தம் | கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலத்தில் குடும்பங்கள் அல்லது வீடுகள் எதுவும் இல்லை, எனவே இடப்பெயர்ச்சியின் அழுத்தம் இந்த விஷயத்தில்/திட்டத்தில் முற்றிலும் இல்லை. |
| உ. | குடும்பப்பிரிவின் தாக்கம் | **பொருந்தாது** |
| 6. | திட்டச் சுழற்சியின் வெவ்வேறு நிலைகளில் ஏற்படும் தாக்கங்கள், சமூகத் தாக்கத்தின் வகை, நேரம், காலம் மற்றும் தீவிரம் ஆகியவை திட்டச்சுழற்சியின் நிலைகளைச் சார்ந்து நெருக்கமாக தொடர்புடையதாக இருக்கும். பாதிப்புகளின் அறிகுறி பட்டியல்கள் கீழே உள்ளன. | நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனைகளை வழங்குவதற்காக கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தை, அவர்கள் தங்களுக்கு இயன்றபோது, சொந்த வீடுகளை கட்ட வேண்டும். திட்ட சுழற்சி அல்லது இந்த வகையான விதிகள் எதுவும் இந்த கையகப்படுத்துதலுக்கு பொருந்தாது. |

| | | |
|---|---|---|
| அ. | கட்டுமானத்திற்கு முந்தைய கட்டம் | |
| | i சேவைகளை வழங்குவதில் தடங்கல் | **பொருந்தாது** |
| | ii உற்பத்தி முதலீட்டில் வீழ்ச்சி | **பொருந்தாது** |
| | iii நில வணிகம் | எதிர்காலத்தில் 138 புதிய வீடுகள் வரவிருக்கும் நிலையில், அதை ஒட்டிய பகுதிகளில் நிலத்தின் விலை உயரும் என்பது இயற்கையானது. |
| | iv. நிச்சயமற்ற மன அழுத்தம் | **பொருந்தாது** |
| ஆ. | கட்டுமானம் | |
| | i. இடப்பெயர்ச்சி மற்றும் இடமாற்றம் | **எழுதப்படுவதில்லை** |
| | ii புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களின் வருகை | பயனாளியின் மக்கள்தொகையை அறியும் வரை இந்த அம்சம் குறித்து கருத்து தெரிவிக்க முடியாது. நிலமாற்றவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதால், அவர்களில் சிலர் கட்டுமானத் தொழிலாளர்களாக இருக்கலாம் எனவே கட்டுமானத் தொழிலாளர்களின் வருகையால் , அவர்கள் இதே பகுதியில் வேலை செய்யப்படலாம். |
| | iii கட்டுமானத் தளத்திற்கு அருகாமையில் தொடர்ந்து வசிப்பவர்களுக்கு உடல்நல பாதிப்புகள். | **பொருந்தாது** . |
| இ. | செயல்பாட்டு கட்டம் | **பொருந்தாது** |
| | i கட்டுமான கட்டத்திற்கு வேலை வாய்ப்புகளை குறைத்தல் | **பொருந்தாது** |
| | ii திட்டத்தின் பொருளாதார நன்மைகள் | இந்தப் பகுதியில்/நிலத்தில் குடியேற வரும் பல குடும்பங்கள் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம். உள்ளூர் பகுதியில் உள்ள தொழிலதிபர் தங்கள் வியாபாரத்தில் ஏற்றம் காணலாம். |

| | | |
|---|---|---|
| | iii புதிய உள்கட்டமைப்பின் நன்மைகள் | **பொருந்தாது** |
| | iv.சமூக அமைப்பின் புதிய அமைப்பு | அனைத்து வீடுகளின் கட்டுமானத்திற்குப் பின், பல பெரிய சமூக அமைப்புகளை தொடங்கலாம் (எடுத்துக்காட்டாக) ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம், வணிக அடிப்படையிலான நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள், இளைஞர் மன்றங்கள் போன்றவை இப்பகுதியில் தொடங்கலாம். |
| ஈ. | பணிநீக்கம் கட்டம் | **பொருந்தாது** |
| | i.பொருளாதார கட்ட இழப்பு | **பொருந்தாது** |
| | ii சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் வாழ்வாதாரத்தில் அதன் தாக்கம் | நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்காக கையகப்படுத்தப்படும் நிலத்தில் சிறிய அளவிலான தனி வீடுகள் மட்டுமே கட்டப்பட உள்ளன. எனவே, சுற்றுச்சூழல் சீர்கேடு அல்லது வாழ்வாதாரத்தில் பாதிப்பு ஏற்படாது. |
| உ. | நேரடி மற்றும் மறைமுக பாதிப்புகள் | |
| | i . பாதிக்கப்பட்ட குடும்பங்கள் (அதாவது, நேரடி நிலம் மற்றும் வாழ்வாதாரத்தை இழந்தவர்கள்) அனுபவிக்கக்கூடிய அனைத்து பாதிப்புகளும் நேரடித் தாக்கங்களில் அடங்கும் . | **பொருந்தாது** |
| | ii நிலம் கையகப்படுத்துவதால் நேரடியாக பாதிக்கப்படாத, திட்டப் பகுதியில் வசிப்பவர்கள் அனுபவிக்கும் அனைத்து பாதிப்புகளும் மறைமுக பாதிப்புகளில் அடங்கும். | **பொருந்தாது** |

| | | |
|---|---|---|
| **ஊ**. | மாறுபட்ட தாக்கங்கள் | |
| | i.பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மீதான தாக்கம் | **பொருந்தாது** . முன்னிலைப்படுத்தப்பட்ட உடல்நலப் பிரச்சினைகள் வயது, பாலினம் போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் பொருந்தும். |
| | ii பாலின தாக்க மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல்கள் மற்றும் பாதிப்பு மற்றும் மீள்தன்மை போன்ற கருவிகள் மூலம் அடையாளம் காணப்பட்ட தாக்கங்கள் | **பொருந்தாது** |
| எ. | ஒட்டுமொத்த தாக்கங்கள் | |
| | i . திட்டத்திற்கான அடையாளம் காணப்பட்ட கேள்விக்குரிய தாக்கங்களுடன் அப்பகுதியில் உள்ள மற்ற திட்டங்களின் அளவிடக்கூடிய மற்றும் சாத்தியமான தாக்கங்கள். | **பொருந்தாது** |
| | ii திட்டப் பகுதியில் நேரடியாக இல்லாமல், உள்நாட்டில் அல்லது பிராந்திய ரீதியாக கூட தாக்கம். | **பொருந்தாது** |

# பகுதி இ - நிர்வாகச் சுருக்கம்

## கையகப்படுத்தப்பட்ட நிலம் பொது நோக்கத்திற்காக பயன்படுகிறது

புதுச்சேரி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இதற்குத் தேவையான அமைப்பாகும். 'புதுச்சேரி வீட்டுத் தளங்கள்/வீடுகள் ஒதுக்கீடு (ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுத்தளங்கள்/வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ்) விதி, 1981' இன் கீழ் ஏழை நிலமற்றவர்கள்/வீடற்ற SC/ST/OEBC மக்களுக்கு இலவச வீட்டுமனைகளை விநியோகிப்பதற்காக முன்மொழியப்பட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.


விநியோகத்திற்கு கிடைக்கக்கூடிய மொத்த நிலங்கள்/வீடுகளின் எண்ணிக்கையில் இருபது சதவீதம் பட்டியல் அல்லாத சாதிகளுக்கும் வழங்கப்படும். சமூகம் பிரிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக இது செய்யப்படுகிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் மொத்தம் மூன்று சென்ட் அளவுள்ள பல்வேறு மனைகளாக பிரிக்கப்பட்டு வழங்கப்படும். மொத்தம் 138 பயனாளிகள் இந்த அமைப்பால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே, நிலம் கையகப்படுத்தப்படுவது பொது நோக்கத்திற்காக **பயன்படுகிறது**.

## கையகப்படுத்தப்படும் உத்தேச நிலத்தின் அளவு

கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது: -

| **வரிசை எண்** | **மறு அளவை எண்** | **நிலத்தின் வகைப்பாடு** | **EXTENT N A Ca** | **உரிமையின் தன்மை** |
|---|---|---|---|---|
| 1 | 100/3 | தரிசு நிலம் | 00-42-06 | **தனியார் நில உரிமையாளர்** திரு. தனஞ்செயன் S/O முன்சாமி கவுண்டர் . |
| | **நிலத்தின் மொத்த பரப்பளவு** | | 00-42-06 | |

**நிலத்தின் வரைபடம் மற்றும் அதன் விவரங்கள் கீழே உள்ள படங்களில் காட்டப்பட்டுள்ளன .**



# நிலத்தின் விவரங்கள் மற்றும் இருப்பிடம்

பாகம்

| சர்வே எண் (1) | சப்டிவிஷன் எண் (2) | விஸ்தீரணம் (3) | தீர்வை (4) | ஒரு போகம் அல்லது இரு போகம் (5) | பட்டாதாரர் அல்லது (சிவாய்ஜாமா) சாகுபடி செய்பவர் எண்ணும், பெயரும் (6) | சாகுபடி செய்யும் குத்தகைதாரரின் பெயர் (6-a) | குத்தகைச் சீட்டில் குறிப்பிட்டுள்ளபடி குத்தகைத் தொகை அல்லது மகசூலில் நிலச் சொந்தக்காரரின் பங்கு (6-b) | முதல் போகம்: சாகுபடியான மாதம் (7) | பயிரின் விவரம் (8) | சாகுபடியான விஸ்தீரணம் (9) | அறுவடை மாதம் (10) | மகசூல் மதிப்பு (11) | இரண்டாம் போகம்: சாகுபடியான மாதம் (12) | பயிரின் விவரம் (13) | சாகுபடியான விஸ்தீரணம் (14) | அறுவடை மாதம் (15) | மகசூல் மதிப்பு (16) | கர்ணத்தினுடைய குறிப்புகள் (17) | (18) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஹெ. ஏ. | ₹ | | | | | | | ஹெ. ஏ. | | ₹ | | | ஹெ. ஏ. | | ₹ | | |
| 100 | 3 | 00-45-50 | 3.10 | | 506 மு. தனஜெயன் | | | | | | | | | | | | | H - A - Ca (00-42-16), செல்போன் டவர் (00-03-34) (or) 3600 Sq. ft. | |

கர்ணத்தினுடைய குறிப்புகள் (17):
1. புகல் சாகுபடியாகும் புலன்கள் விஷயங்களில் சாகுபடி அளவை விஸ்கணக்கிலும்.
2. பட்டாவுக்கு வராத நிலமாயிருந்தால் சாகுபடி செய்தவர் அல்லது அனுபோகதாரர் பெயரும்,
3. கைப்பற்றில் சேராத நிலத்தில் சாகுபடி இல்லாமல் கைப்பற்றப்பட்ட விஸ்தீரணமும், தன்மையும்.
4. முந்தின மாதங்களில் மானாவாரி சாகுபடியான நிலங்களும் பிந்திய மாதங்களில் நீர்ப்பாய்ச்சப்பட்ட விவரங்களும் இவ்விடத்தில் தாக்கல் செய்ய வேண்டியது.

வில்லியனூர் வட்டாட்சியர் அலுவலக கடித எண்: 3360/21-06-2023 தேதியிட்ட நடவடிக்கையின்படி இந்த அடங்கல் வழங்கப்படுகிறது.

28/06/2023

Verified by
K. Nagarajan
23.6.2023

Counter-Signed
03/07/23

---

**Extract of Settlement register for lands in the Villages of Puducherry Union Territory**

(See Rule 8 of the Pondicherry Settlement Rules, 1970)

புதுச்சேரி யூனியன் ஆட்சி பகுதியில் உள்ள கிராமங்களின் நிலவரித்திட்ட பதிவேட்டின் சுருக்கம்

(புதுவை நிலவரித்திட்ட விதிகள், 1970-ன் 8-வது விதி பார்க்கவும்)

Name of Taluk/Sub Taluk : VILLIANUR — வட்டம்/துணை வட்டத்தின் பெயர் : வில்லியனூர்

Name of the Commune : VILLIANUR — கொம்யூன் பெயர் : வில்லியனூர்

Number and Name of the Revenue Village : 52 - ARIYUR — வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் : 52 - அரியூர்

| Resurvey Number (1) | Sub Division Number (2) | Old Survey Number (3) | Government (G) Ryotwari (R) (4) | Waste (W) Poramboke (P) (5) | Source of irrigation and Class (6) | If double crop, rate of Composition (7) | Class and sort of Soil (8) | Taram (9) | Rate per Hectare Rs. P. (10) | Extent H. A. C. (11) | Assessment Rs. P. (12) | Patta No. and Name of the registered holder (13) | Name of the tenant if the registered holder himself is not cultivating the land (14) | Remarks (15) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | 3 | 333 | R | D | | | 7 - 1 | 3 | 6.90 | 00-45-50 | 3.10 | 506<br>1. தனஞ்செயன் த/பெ முனிசாமிக் கவுண்டர்<br>DHANAJEYAN S/O MUNISAMY COUNDER | | |

Verified by:
YESVANTHAIYAH S
TAHSILDAR
Date: 04/05/2013
Location: PUDUCHERRY UT

Issued by:
SURESHRAJ A
TAHSILDAR
Date: 17/03/2015
Location: PUDUCHERRY

Note : This certificate is computer generated and does not require any Seal/Signature in original. The authenticity of this certificate can be verified at https://puduvaisevai.py.gov.in using the Security Code [illegible]-1708-29907.

Page 1 of 1

**<u>கையகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நிலம், திட்டத்திற்குத் தேவையான குறைந்தபட்சத் தொகையாகும்.</u>**

நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டுமனைகள் வழங்கும் பணி புதுச்சேரி முழுவதும் ஒரே சீராக நடைபெறுவதால், மொத்தம் 138 பயனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர் மேலும் ஒவ்வொரு வீட்டின் தளமும் / மனையும் சரியான அளவாகவும் , சாலைகள் மற்றும் வடிகால் போன்ற பொதுவான வசதிகளுக்கு ஏற்றவாறு உள்ளது. எனவே, கையகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நிலமானது, திட்டத்திற்கு தேவையான சரியான நிலம் தான் என்பதை நிலம் தேவைப்படும் அமைப்பு உறுதி செய்துள்ளது.



**உள் சாலையிலிருந்து கல்லறை வரை நிலத்தின் ஒரு காட்சி.**

**ஆனந்தபுரம் சாலையின் (கிழக்கு-மேற்கு) மூலையில் மொபைல் டவருடன் கூடிய நிலத்தின் ஒரு காட்சி**



## அசையும் மற்றும் அசையா சொத்துகளின் விவரங்கள்

கையகப்படுத்த உத்தேசித்துள்ள நிலம் வெறுமையாகவும், தரிசாகவும் மற்றும் தேவையற்ற முட்கள் நிறைந்த புதர்களுடன் உள்ளது மேலும் நிலத்தில் நான்கு மின்விளக்கு கம்பங்கள் உள்ளன, அவற்றில் இரண்டு மின்விளக்கு கம்பங்கள் மாற்றப்பட வேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டும். இந்த மின் விளக்கு கம்பங்களை தவிர வேறு எந்த அசையும் அல்லது அசையா சொத்துகளும் நிலத்தில் இல்லை.



**மின்விளக்கு கம்பங்களுடன் கூடிய நிலத்தின் ஒரு காட்சி**

## ஒட்டுமொத்த நன்மைகள் மற்றும் தாக்கங்கள்

இத்திட்டத்தின் மூலம், நிலமற்ற ஏழை மக்கள் 138 நபர்கள் பயனடைய உள்ளார்கள். நிலத்தை மூன்று சென்ட் அளவில் வீட்டு மனையாக பிரிக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். மேலும் வீட்டு மனைகளை விநியோகித்த பிறகு, அவர்கள் தற்போது செலுத்திக்கொண்டிருக்கும் வீட்டு வாடகையை செலுத்துவதில் இருந்து விடுவிக்கப்படுவார்கள். எனவே, குடும்பங்களுக்கு ஒரு கௌரவமான சேமிப்பும் மற்றும் அனைத்து கால நிலைகளிலிருந்தும் பாதுகாக்கும் வீடும் , ஒரு காலியான பயனற்ற தரிசு நிலமானது பல வீடுகளை கொண்டுள்ள பகுதியாக மாறுவதே பெரும் வளர்ச்சியாகும் பல வீடுகளை கொண்டுள்ள பகுதியாக மாறுவதே பெரும் வளர்ச்சியாகும்.

**பகுதி-ஆ இல் உள்ள முக்கிய தாக்கப் பகுதியில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.**

## செயலாக்கமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது

### வில்லியனூர் துணை ஆட்சியர் (வருவாய்) உடன் சந்திப்பு

வில்லியனூர் திரு. சோம சேகர் அப்பாராவ் கோட்டாரு , IAS துணை ஆட்சியர் அவர்களிடம், அனுமதி பெற்று , ஜூலை 15,2024 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு அவரை சந்தித்து ஆய்வின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் திட்டத்தின் தேவை குறித்தும் சமூக தாக்கக்கணிப்புக்குழு விவரங்களைக் கேட்டு தெரிந்து கொண்டது மற்றும் துணை ஆட்சியர் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதியளித்தார். அவரது எதிர்பார்ப்புகளை அறிய இந்த சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது மேலும் திட்டமிட்ட காலக்கெடுவுடன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அவர் சமூக தாக்கக்கணிப்புக்குழுவிடம் கேட்டுக் கொண்டார் குழுவின் உறுப்பினர்களும் அதை ஏற்றுக் கொண்டனர்.

### தொலைபேசி உரையாடல்

சமூக தாக்கக்கணிப்புக்குழு துணை ஆட்சியர் அலுவலக உதவி கண்காணிப்பாளர் திரு. எம். நாகமுத்துவுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு அறிக்கை தயாரிப்பதற்குத் தேவையான அனைத்து விவரங்களையும் பெற்றுக்கொண்டது. சமூக தாக்கக்கணிப்புக்குழுவுக்கு வில்லியனூர் துணை ஆட்சியர் அலுவலகத்திலிருந்து சரியான நேரத்தில் தேவையான அனைத்து ஆதரவும் கிடைத்தது.

**சமூக தாக்கக்கணிப்புக்குழு மற்றும் வில்லியனூர், துணை ஆட்சியர் (வருவாய்) அலுவலக அதிகாரிகளுடன் நிலம் மேற்பார்வையிடல்.**

வில்லியனூர் துணை ஆட்சியர் (வருவாய்) அவர்களின் சந்திப்புக்கு பின் உடனடியாக நிலத்தை பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டது. சமூக தாக்கக்கணிப்புக்குழுவுடன் உதவி கண்காணிப்பாளர் திரு. எம். நாகமுத்து, துணை நில அளவையாளர் திருமதி ஜி. விஜயலட்சுமி மற்றும் அரியூர் வி. ஏ. ஓ திருமதி தனலட்சுமி ஆகியோர் உடன் சென்றனர்.

நிலத்தை பார்வையிட்டது மிகவும் பயனுள்ளதாக இருந்தது மற்றும் சமூக தாக்கக்கணிப்புக்குழு ஆய்வின் ஒரு பகுதியாகவும் இருந்தது. இந்த மேற்பார்வையிடல் சமூக தாக்கக்கணிப்புக்குழுவிற்கு புவியியல் மற்றும் நிலத்தில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இருப்பதைப் புரிந்துகொள்ள உதவியது. கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலத்தின் அளவை சமூக தாக்கக்கணிப்புக்குழுவிற்கு உடனிருந்த அதிகாரிகள் தெளிவாக விளக்கி காட்டினர்.



**சமூக தாக்கக்கணிப்புக்குழு மற்றும் வில்லியனூர் துணை ஆட்சியர் (வருவாய்) அலுவலக அதிகாரிகளுடன் நிலம் மேற்பார்வையிடல்**



**வருவாய் அதிகாரிகள் நில வரைபடத்தை தெளிவு படுத்துகிறார்கள்**

## நில உரிமையாளருடன் தொலைபேசி உரையாடல்

சமூக தாக்கக்கணிப்புக்குழு நில உரிமையாளருடன் தொலைபேசியில் உரையாடி சில விவரங்களைப் பெற்றது. மேற்படி திட்டத்திற்காக அவர் தனது நிலத்தை வழங்க தயாரா என்பதை அறியவும் தொலைபேசி உரையாடல் மேற்கொள்ளப்பட்டது. அவரிடமிருந்து நல்ல பதில் கிடைத்ததால், சமூக தாக்கக்கணிப்புக்குழு அவரது வீட்டில் சந்திப்பதற்கு பதிலாக தொலைபேசியில் நேர்காணலை நடத்த திட்டமிட்டது. பின்னர், சமூக தாக்கக்கணிப்புக்குழு தொலைபேசியில் நேர்காணல் செய்வதை விட அவரது வீட்டில் சந்தித்து விவரங்கள் சேகரிப்பது நல்லது என்று நினைத்தது.

## நில உரிமையாளரை சந்திப்பது - வீட்டிற்கு வருகை

**சமூக தாக்கக்கணிப்புக்குழுத் தலைவர் நில உரிமையாளரிடம் பேசி, அவரது வீட்டில் அவரைச் சந்திப்பதற்கான நேரத்தை நிர்ணயித்தார். 21 ஜூலை 2024 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் அவர்களது இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.**

**கூட்டத்தின் முடிவுகள் வருமாறு-**

***இந்த திட்டத்திற்காக நில உரிமையாளர் தனது நிலத்தை கொடுக்க தயாராக உள்ளார்.***

## கலந்துரையாடல் நடைபெற்றது

சமூக தாக்க கணிப்புக்குழுவானது நிலம், அதன் பரப்பளவு, எல்லைகள் மற்றும் நீர்நிலைகள் இருப்பதைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள உதவி கண்காணிப்பாளர் திரு. எம். நாகமுத்து, துணை நில அளவையாளர் திருமதி. ஜி. விஜயலட்சுமி மற்றும் வி.ஏ.ஓ திருமதி தனலட்சுமி ஆகியோருடன் விரிவாக கலந்துரையாடி விவாதித்தது.

## பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் இடம்பெயர்ந்த குடும்பங்கள்

முன்மொழியப்பட்ட திட்டத்திற்காக கையகப்படுத்தப்படும் நிலம் , எண். 7, ஆனந்தபுரம் சாலை, அரியூர் , திரு. எம். தனஞ்செயன் என்ற தனியார் உரிமையாளருக்கு சொந்தமானது, . நிலம் காலியாகவும் தரிசாகவும் உள்ளது. இந்த நிலத்தில் எந்த குடும்பமும் வசிக்கவில்லை, நான்கு மின்விளக்கு கம்பங்கள் தவிர வேறு எந்த உள்கட்டமைப்பு வசதிகளும் இல்லை மேலும் மின்விளக்கு கம்பங்களில் இரண்டினை மற்றும் மாற்ற வேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டும் .

எந்த குடும்பமும் வசிக்கவில்லை என்பதால், நிலத்திலிருந்து எந்த வகையான வருமானத்தையும் பெறாத எவரும் இல்லாததால், குடும்பங்கள் பாதிக்கப்படுவது அல்லது இடம்பெயர்வது பற்றிய கேள்விகள் எதுவும் எழவில்லை.

## பரிந்துரைகள்

- நிலம் தரிசு நிலமாகவும் தேவையற்ற முட்புதர்கள் நிறைந்ததாகவும் உள்ளதால் நிலத்தை அளவிட்டு குறிக்கவும் வீட்டு மனைகளாக வரையறுக்கவும் தடையாக உள்ளதால் தேவையற்ற முட்புதர்களை அகற்ற வேண்டும் என்று சமூக தாக்க கணிப்புக்குழு கூறுகிறது.
- இரண்டு மின்விளக்கு கம்பங்கள் அகற்றப்பட வேண்டும்.
  மின்விளக்கு கம்பங்களை அகற்றும் போது போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், இந்த மின்விளக்கு கம்பங்களை மாற்றும் போது அல்லது அகற்றும் போது, மின்சாரம் நிறுத்தப்படலாம் எனவே குடியிருப்பு வீடுகளுக்கு இது குறித்து முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும்,
- திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 138 குடும்பங்கள் பயனாளிகளின் எண்ணிக்கையில் நிலம் தேவையான அமைப்பு விலகக்கூடாது.

- அனைத்து மனைகளும் ஒரே அளவு / சம அளவில் இருப்பதை நிலம் தேவைப்படும் அமைப்பு உறுதி செய்ய வேண்டும். (முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 3 சென்ட்).

- சமூகம் பிரிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக மொத்த நிலத்தில் இருபது சதவீதம் பட்டியலின சாதியினர் அல்லாத மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
- நிலம் தேவைப்படும் அமைப்பு அனைத்து பயனாளிகளுக்கும் கூடிய விரைவில் வீட்டு மனையை விநியோகிக்க வேண்டும்.
- அனைத்து தகுதியான நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் தகுதியான பயனாளிகளுக்கும் வீட்டுத் தளங்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இது சம்பந்தப்பட்ட துறையின் தனிச்சிறப்பு என்றாலும், சமூக தாக்கக்கணிப்புக்குழு இதையும் குறிப்பிட விரும்புகிறது.
- தேவையற்ற முட்கள் நிறைந்த புதர்களை அகற்றும் பணியின் போது, அருகில் வசிப்பவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.
- நிலத்தை குறிக்கும் போதும் மற்றும் நிலத்தை வீட்டு மனைகளாக பிரிக்கும் போதும் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். பொருட்களை எடுத்துச் செல்ல வாகனங்கள் கொண்டு வரப்பட்டால், அவ்வழியாக செல்பவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், வாகனங்களை பிரதான சாலையில் நிறுத்தக்கூடாது.
- நிலம் தேவைப்படும் அமைப்பு, தற்போதுள்ள வீட்டு மனைகளை விநியோகிக்கும் விதியிலிருந்து விலகக்கூடாது. நிலத்தின் ஒருபுறம் பிரதான சாலையும், சாலையின் மறுபுறம் கல்லறை முற்றமும் இருப்பதால், பிரதான சாலைக்கு அருகில் உள்ள நிலத்தைப் பெற பயனாளிகளுக்கு அழுத்தங்கள் தரப்படாமல். தற்போதுள்ள விதியை கடைபிடிக்க வேண்டும்.

# படிவம் IV

# சமூக தாக்க மேலாண்மை திட்டம்

**1. அணுகுமுறை மற்றும் தணிப்பு**

மேற்படி இந்த திட்டத்திற்காக நில உரிமையாளரிடமிருந்து நிலத்தை வாங்குவதற்கு நிலம் தேவைப்படும் அமைப்பு சம்மதம் கோரியிருப்பதால், முக்கிய பணிகள் எல்லாம் முடிந்ததாக தெரிகிறது. ஆனால், நிலத்தை விநியோகிப்பதில் தற்போது உள்ள அனைத்து விதிமுறைகளையும் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்பதே நிலம் தேவைப்படும் அமைப்பின் அணுகுமுறை. இதனால் பயனாளிகள் எவர் மீதும் அழுத்தங்கள் இருக்கக் கூடாது மற்றும் எந்த ஒரு அதிகாரியும் பயனடையும் எவருக்கும் பாரபட்சமும் அல்லது ஒரு தலை பட்சமாகவோ செயல்பட மாட்டார்கள். பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு இறுதி செய்யப்பட்டால், பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். நிலம் தேவைப்படும் அமைப்பின் அணுகுமுறை, அவர்களின் முன்மொழிவில் குறிப்பிட்டுள்ளபடி நிலத்தை 138 சம பாகங்களாகப் பிரிப்பதாகும். தேவைப்படும் அமைப்பு ஒரு புதிய குடியேற்றத்தில் மற்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளின் தேவையையும் மனதில் கொள்ள வேண்டும். இதனால் இந்த அணுகுமுறை திட்டத்தை மிகவும் சுமூகமாக முடிக்க உதவும்.

இரண்டாவதாக, RFCTLARR சட்டத்தின் 26-30 பிரிவுகளின்படி கணக்கிடப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் நிலம் கையகப்படுத்தப்படும் உரிமையாளர் தரப்பினருக்கு இழப்பீடு வழங்கப்படும். ஆனால் அனைத்து தணிப்பு நடவடிக்கைகளும் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்வது நிலம் தேவைப்படும் அமைப்பின் முதன்மையான கடமையாகும். சமூக தாக்க கணிப்புக்குழு எந்தவொரு தேவையற்ற தாமதமும் இன்றி, நில உரிமையாளருக்கு இழப்பீடு வழங்கப்படுவதை பணம் எடுக்கும் மற்றும் வழங்கல் அதிகாரி(DDO) உறுதிசெய்ய கோரிக்கையின் அடிப்படையில் ஒரு ஆலோசனையை பதிவு செய்ய விரும்புகிறது.

**2. தணிப்பு மற்றும் இழப்பீட்டுத் தாக்கத்தைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்**

தகுதியுள்ள பயனாளிகளுக்கு மட்டுமே நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்வது, நிலம் தேவைப்படும் அமைப்பின் முதன்மையான கடமையாகும் மற்றும் அன்றைய விதிமுறைகளின் அடிப்படையில் வீட்டு மனை விநியோகம் செய்யப்பட வேண்டும். பயனாளிகளின் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்ட பிறகு பட்டியலில் இருந்து எந்த ஒரு விலகலும் இருக்கக் கூடாது.

கணக்கிடப்பட்ட இழப்பீட்டுத் தொகை நில உரிமையாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்தத் தொகை முழுமையாகச். செலுத்தப்பட வேண்டும் விதிகளின்படி ஏதாவது குறிப்பிட்டு இருந்தால் அதற்கான (TDS) வரிகள் பிடித்துக் கொண்டு கொடுக்கப்படும்.

உத்தேச நிலம் கையகப்படுத்துதலில் மீள்குடியேற்றம் இல்லாததால், மறுவாழ்வு மற்றும் அது தொடர்பான இழப்பீடுகள் எழவில்லை.

**3. சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் மற்றும் இழப்பீடு ஆகிய விதிமுறைகளில் சேர்க்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.**

இத்திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு இழப்பீடு இல்லை . நில உரிமையாளருக்கு மட்டும் இழப்பீடு வழங்க வேண்டும்.

**4. முன்மொழியப்பட்ட திட்டத்தை அறிமுகப்படுத்த தேவையான அமைப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள்.**

நிலமற்ற ஏழை மக்களின் பெரும் கோரிக்கையின் அடிப்படையில் நிலம் தேவைப்படும் அமைப்பு தற்போதைய திட்டத்தை மேற்கொண்டுள்ளது. மேலும் அவர்கள் விதிமுறைகளின் படி ஒரு முன்மொழிவை அனுப்பியிருந்தனர் மற்றும் இடம் தேர்வு குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. நில உரிமையாளருக்கு இழப்பீடு வழங்குவதற்கு தேவையான நிதி அனுமதியையும் அமைப்பு பெற்றுள்ளது. அனைத்து நிலைகளிலும் தகுதியுள்ளவர்களுக்கு 138 பயனாளிகளுக்கு வீட்டு மனைகளை விநியோகிக்கவும் நிலம் தேவைப்படும் அமைப்பு முன்மொழிந்துள்ளது.

**5. சமூக தாக்க மதிப்பீட்டு செயல்முறை மற்றும் பொது விசாரணையின் கண்டுபிடிப்புகளுக்கு பதிலளிக்கும் வகையில் தேவைப்படும் அமைப்பு உறுதியளிக்கும் கூடுதல் நடவடிக்கைகள்.**

தேவையற்ற காலதாமதமின்றி நில உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதை நிலம் தேவைப்படும் அமைப்பு உறுதி செய்ய வேண்டும். தற்போதுள்ள விதி/கொள்கையின்படி அடையாளம் காணப்பட்ட தகுதியுள்ளவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதையும் நிலம் தேவைப்படும் அமைப்பு உறுதி செய்ய வேண்டும்.

**6. சமூகத் தாக்க மேலாண்மைத் திட்டமானது நிறுவன கட்டமைப்புகள் மற்றும் ஒவ்வொரு தணிப்பு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான முக்கிய நபர்கள் மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைக்கான காலக்கெடு மற்றும் செலவுகள் பற்றிய விளக்கத்தையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.**

நிலம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, அனைத்து காலக்கெடுவையும் சந்திக்க தேவையான ஒரு திட்டம் கையில் இருக்க வேண்டும். நிலத்தில் உள்ள புதர்களை அகற்றுதல்,

நிலத்தை வீட்டு மனைகளாகப் பிரித்தல், சாலை மற்றும் அனைத்துப் பக்கங்களிலும் உள்ள பொதுவான இடங்களைக் குறிப்பது, காலக்கெடுவின்படி நிலம் தேவைப்படும் அமைப்பால் செய்யப்பட வேண்டும் . மின்சாரம் மற்றும் பொதுப்பணித் துறை மற்றும் நகர மற்றும் கிராம திட்டமிடல் போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து, வீட்டின் தளத்தை முன்கூட்டியே விநியோகிக்க தேவையான அனைத்து வேலைகளையும் முடிக்க வேண்டும்.

தற்போதைய திட்டத்திற்கான பணியாளர் வரிசை முறையானது தேவைப்படும் அமைப்பால் தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் முன்கூட்டியே அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும், திட்டத்தை முடிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு, நிலம் தேவைப்படும் அமைப்பு எந்த காரணத்தையும் கூறக்கூடாது.


## பொது விசாரணை பற்றிய அறிக்கை

### பொது விசாரணை நடத்துவதற்கான ஏற்பாடுகள்

வில்லியனூர் துணை ஆட்சியருடன் (வருவாய்) கலந்தாலோசித்த பின் பொது விசாரணை தேதியினை நிர்ணயித்தது 29 ஜூலை 2024 அன்று தேதியை நிர்ணயித்தது சமூக தாக்கக்கணிப்புக்குழு பொது விசாரணை அறிவிப்பை தமிழ் பதிப்பில் தயாரித்து, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வழங்கியது மற்றும், பொதுமக்களின் விழிப்புணர்வுக்காக வில்லியனூரில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வில்லினூர் துணை ஆட்சியர் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டது. .




**அரியூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் மக்கள் கருத்து கூறும் பொது விசாரணை அறிவிப்பு காட்சிப்படுத்தப்பட்ட காட்சி**




**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை (DCR)அலுவலகத்தில் பொது விசாரணை அறிவிப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ள காட்சி**

இந்த பொது விசாரணை நடைமுறையின் ஒரு பகுதியாக சமூக தாக்க கணிப்புக்குழு நில உரிமையாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பொது விசாரணை நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைத் தெரிவித்து, அவர் பொது விசாரணையில் பங்கேற்பதற்கான உத்தரவாதத்தைப் பெற்றது. இந்த அறிவிப்பானது நில உரிமையாளருக்கு புலனம் (Whatsapp) மூலம் அவரது தனிப்பட்ட கைபேசி எண்ணுக்கு பகிரப்பட்டது.

மேலும் ஆதிதிராவிடர் நலத்துறையின் உதவி இயக்குனரையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்து கேட்பு கூட்டம் குறித்து தெரிவிக்கப்பட்டதுடன், பொது விசாரணைக்கு ஆஜராக ஒரு பிரதிநிதியை அனுப்புமாறும் கேட்டுக்கொண்டனர்

சமூக தாக்க கணிப்புக்குழு பொது விசாரணையை சிறந்த முறையில் நடத்த அனைத்து விதத்திலும் தயாராக இருந்தது.

**மக்கள் கருத்து தெரிவிக்கும் பொது விசாரணை நாள்**

அரியூரில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகமானது பொது விசாரணை நடத்தப்படும் இடமாகும். சமூக தாக்க கணிப்புக்குழு பொது விழிப்புணர்வு மற்றும் மக்களின் பங்கேற்பிற்காக பொது விசாரணை அறிவிப்பு என்ற பதாகையை தெளிவாக காட்சிப்படுத்தியுள்ளது.




**கருத்து கேட்க்கும் அலுவலகத்தின் வெளியில் பொது விசாரணை பாதகை காட்சிப்படுத்தப்பட்ட காட்சி**

**பொது விசாரணை நடவடிக்கைகள் - நில உரிமையாளர்**

நில உரிமையாளர் திரு. எம். தனஞ்செயன் அவர்கள், பொது விசாரணை நடைபெறும் இடத்திற்குச் நேரில் வந்து, இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக இருக்க விரும்புவதாக வெளிப்படுத்தினார்.

குறிப்பிட்ட நோக்கத்திற்காக நில உரிமையாளர் தனது நிலத்தை கொடுக்க தயாராக இருக்கிறார் மேலும் நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்க அரசு நிலத்தைக் கையகப்படுத்துவதில் அவருக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. சமூக தாக்க கணிப்புக்குழுவினர், அவரது நிலத்தை வழங்குவதற்கான விருப்பத்தை அவரிடமிருந்து மீண்டும் ஆங்கிலத்திலும் மற்றும் தமிழிலும் எழுத்துப்பூர்வமாக

உறுதிப்படுத்தியுள்ளனர், எழுதிய கடிதத்தை அவரது மகனும் கவனமாகச் சரிபார்த்தார்.

**பொது விசாரணை நடவடிக்கைகள் - நிலம் தேவைப்படும் அமைப்பு- ஆதி திராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, புதுச்சேரி**

**ஆதி திராவிடர்** நலத்துறை சார்பில் நல அலுவலர் திரு. G. ராஜேஷ் கண்ணன் அவர்கள் கலந்து கொண்டார். மேலும், பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு இறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில் நிலம் விநியோகிக்கப்படும் என்று கூறினார்.



**நில உரிமையாளர் மற்றும் நிலம் தேவைப்படும் அமைப்பின் பிரதிநிதி பங்கேற்கும் பொது விசாரணை**

மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் வில்லியனூர் துணை ஆட்சியர் (வருவாய்) , வில்லியனூர் தாசில்தார் மற்றும் வருவாய் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர் . வில்லியனூர் துணை ஆட்சியர் புதுப்பிப்புகளை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார் மேலும் சமூக தாக்க கணிப்புக்குழுவின் அறிக்கையை அறிய விரும்பினார் மற்றும் தற்போது நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக ஏதேனும்

ஆட்சேபனை உள்ளதா என்பதை அறியவும் விரும்பினார். பொது விசாரணையின் போது வில்லியனூர் துணை ஆட்சியர் (வருவாய்) , வில்லியனூர் தாசில்தார் மற்றும் வருவாய் அதிகாரி ஆகியோர் முன்னிலையில் சிறந்த முறையில் நடந்ததற்கான அடையாளமாக இருந்தது. இறுதியாக சமூக தாக்க கணிப்புக்குழு வரைவு அறிக்கையையும் துணை ஆட்சியர் பார்வையிட்டார்.



**சமூக தாக்க கணிப்புக்குழுவுடன் பொது விசாரணையின் போது வில்லியனூர் துணை ஆட்சியர் (வருவாய்)**



**பொது விசாரணையின் போது துணை ஆட்சியர், RO & தாசில்தார்**

பொது விசாரணைக்கு திட்டமிடப்பட்டிருந்த மதியம் 1.00 மணி வரை சமூக தாக்க கணிப்புக்குழுவினர் தங்கள் இருப்பைக் காட்டினர். வேறு யாரும் கலந்து கொள்ளவில்லை அல்லது தங்கள் இருப்பைக் காட்டவில்லை மற்றும் பொதுக் கருத்துக் கேட்பு கூட்டத்தில் பொது மக்களில் இருந்து ஒருவர் கூட வரவில்லை.

**தற்போது நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக யாரிடமும் ஒரு ஆட்சேபனையும் இல்லை** என்று கூறி அறிக்கையை முடிக்க சமூக தாக்க கணிப்புக்குழு விரும்புகிறது . **எனவே, ஏழை மக்களின் நலன் கருதி நிலம் கையகப்படுத்துதல் திட்டமானது மேலும் செயல்படுத்தப்படும்.**

பொது விசாரணையை சுமூகமான முறையில் நடத்துவதற்கு, துணை ஆட்சியர், RO, தாசில்தார், உதவியாளர் மற்றும் நில உரிமையாளர் மற்றும் தேவைப்படும் அமைப்பின் பிரதிநிதி ஆகியோரிடமிருந்து பெற்ற ஆதரவை சமூக தாக்க கணிப்புக்குழு அங்கீகரிக்க விரும்புகிறது.

மேலும், சமூக தாக்க கணிப்புக்குழுவானது, சமூகத் தாக்க மதிப்பீட்டின் அறிக்கையின் தமிழ்ப் பதிப்பை முழு ரகசியமாகத் தயாரிக்க உதவிய சமூகப் பணி நிபுணரான திரு. ரூசோ ரிக்சன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**அறிக்கையின் முடிவு**